## 1. நெல் - கோ(ஆர்) 48

**சிறப்பியல்புகள்**

- மேம்படுத்தப்பட்ட வெள்ளை பொன்னி அரிசியை ஒத்த சன்ன அரிசி கொண்டது
- நடுத்தர மாவு சத்து மற்றும் சிறந்த சமையல் பண்புகள் உடையது
- தண்டு துளைப்பான் மற்றும் தத்துப்பூச்சிகளுக்கு மிதமான எதிர்ப்பு சக்தி
- குலைநோய், துங்ரோ மற்றும் இலையுறை கருகல் நோய்களுக்கு மிதமான எதிர்ப்பு சக்தி

உருவாக்கிய முறை : கோ 43 , ஏஎஸ்டி 19

வயது (நாட்கள்) : 130 — 135

பருவம் : தாளடி

தானிய விளைச்சல்

| | |
|---|---|
| கிலோ , எக் | 6007 |
| கூடுதல் மகசூல் | |
| மே.வெள்ளை பொன்னி | 10.0 |
| பிபிடி 5204 | 17.0 |

அதிகபட்ச மகசூல் : 9625 கிலோ,எக்

பயிரிட உகந்த மாவட்டங்கள் : தமிழ்நாட்டில் விருதுநகர், இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் நீலகிரி தவிர ஏனைய மாவட்டங்கள்



## 2. பனிவரகு – கோ (பிவி) 5

**சிறப்பியல்புகள்**

- உயர் விளைச்சல் தரக்கூடியது
- அதிக தூர் எண்ணிக்கை மற்றும் சாயாத தன்மையுடையது
- வறட்சிக்கு உகந்தது, குறைந்த வயதுடையது
- மதிப்பூட்டப்பட்ட பதார்த்தங்கள் செய்வதற்கேற்ற தானிய குணாதிசயங்கள் பெற்றது
- கரிப்பூட்டை மற்றும் குருத்துப் பூச்சி தாக்குதலை தாங்கும் தன்மை கொண்டது
- சுவையான மாட்டுத் தீவனம்

உருவாக்கிய முறை : பிவி 1403 , ஜிபியுபி 21

வயது (நாட்கள்) : 70

பருவம் : மானாவாரி ஆடிப்பட்டம் (ஜுன்-ஜுலை)
புரட்டாசிப்பட்டம் (செப்டம்பர்-அக்டோபர்)

தானிய விளைச்சல்

| | தானியம் | வைக்கோல் |
|---|---|---|
| கிலோ , எக் | 2381 | 6675 |
| கூடுதல் மகசூல் | | |
| கோ 4 | 24.4 | 91.1 |
| ஜிபுயுபி 21 (தேசிய இரகம்) | 35.0 | 15.1 |

அதிகபட்ச மகசூல் : 3951 கிலோ,எக்

பயிரிட உகந்த மாவட்டங்கள் : சேலம், நாமக்கல், விழுப்புரம், திண்டுக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் மானாவாரி மற்றும் பழங்குடி இனத்தவர் வாழும் மலை சார்ந்த பகுதிகள், வளம் குன்றிய மானாவாரி நிலங்கள்



## 3. உளுந்து – விபிஎன் (பிஜி) 5

### சிறப்பியல்புகள்

- கூடுதல் மகசூல்
- வருடம் முழுவதும் மஞ்சள் தேமல் நோய்க்கு எதிர்ப்பு சக்தி
- மானாவாரி மற்றும் இறவையில் பயிரிட ஏற்றது

உருவாக்கிய முறை : வம்பன் 1 , யுகே 17

வயது (நாட்கள்) : 65-70

பருவம் : ஆடிப்பட்டம் (ஜுன்-ஜுலை)
புரட்டாசிப்பட்டம் (செப்டம்பர்-அக்டோபர்)
தைப்பட்டம் (பிப்ரவரி - மார்ச்)

விளைச்சல்

| | |
|---|---|
| கிலோ , எக் | 820 |
| கூடுதல் மகசூல் | |
| வம்பன் 3 | 12.32 |
| ஏடீடி 5 | 22.02 |
| விபிஎன் (பிஜி) 4 | 9.33 |

அதிகபட்ச மகசூல் : 1212 கிலோ,எக்

பயிரிட உகந்த மாவட்டங்கள் : தமிழகம் முழுவதும் அனைத்துப் பருவங்களிலும் பயிரிட ஏற்றது.



## 4. அவரை — கோ(ஜிபி) 14

### சிறப்பியல்புகள்

- குறுகிய வயதுடைய குட்டைச் செடி இரகம்
- கொடி ஓடாத செடி
- வேரழுகல் மற்றும் இலைப்புள்ளி நோய்களுக்கு எதிர்ப்புத் திறன்
- காய்ப்புழு தாக்குதலை தாங்கி வளரும் தன்மை

| | |
|---|---|
| உருவாக்கிய முறை ' | கோ 9 , கோ 4 |
| வயது (நாட்கள்) ' | 70-75 (காய்கறிப்பயிர்)<br>80-85 (விதைப்பயிர்) |
| பருவம் ' | ஆடிப்பட்டம் (ஜூன் - ஜூலை)<br>புரட்டாசிப்பட்டம் (செப்டம்பர்-அக்டோபர்)<br>தைப்பட்டம் (பிப்ரவரி — மார்ச்) |

விளைச்சல் (காய்கள்)

| | |
|---|---|
| கிலோ , எக் | 7984 |
| கூடுதல் மகசூல்ீ (ூ) | |
| கோ 13 | 22.49 |

| | |
|---|---|
| அதிகபட்ச மகசூல் ' | 13194 கிலோ,எக் |
| பயிரிட உகந்த மாவட்டங்கள் ' | தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், சேலம், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் |



## 5. நிலக்கடலை — விஆர்ஐ (ஜிஎன்) 6

**சிறப்பியல்புகள்**

- செடியின் அடிப்பாகத்தில் நன்கு காய்ப்பிடிக்கும் தன்மை
- துரு, இலைப்புள்ளி மற்றும் மொட்டு அழுகல் நோய்க்கு மிதமான எதிர்ப்புத் திறன்
- அதிக எண்ணெய் சத்து (50%)
- அதிக உடைப்புத் திறன் (75%)
- சிறிய திரட்சியான பருப்பு
- வறட்சியை தாங்கி வளரும் தன்மை

உருவாக்கிய முறை : ஏஎல் ஆர் 2 , விஜி 9513 இரகங்களின் வழித்தோன்றல்

வயது (நாட்கள்) : 100-105

பருவம் : மானாவாரி (ஜுன் - ஜுலை)
இறவை (டிசம்பர் - ஜனவரி)

விளைச்சல்

| | மானாவாரி | இறவை |
|---|---|---|
| கிலோ , எக் | 1916 | 2403 |
| கூடுதல் மகசூல் | | |
| விஆர்ஐ 2 | 10.5 | 13.5 |

அதிகபட்ச மகசூல் : 5200 கிலோ,எக்

பயிரிட உகந்த மாவட்டங்கள் : தமிழகமெங்கும் மானாவாரி மற்றும் இறவை பயிர் செய்யும் பகுதிகளுக்கு ஏற்றது. மணல் பாங்கான மண் , செம்புரை மண் வகை ஏற்றது.



## 6. மரவள்ளி — சிடிசிஆர்ஐ கோடிபி) 5

**சிறப்பியல்புகள்**

- தேமல் நோய்க்கு எதிர்ப்பு திறன் கொண்டது.
- மிதமான மாவுசத்து உடையது (28%)
- சராசரி மகசூல் (38 டன் , எக்டர்)
- கிழங்குகள் நீளமாகவும், உருளை வடிவிலும், சதைப்பற்று வெண்மையாகவும், தோல் நீக்குவதற்கு எளிதாகவும், நச்சு தன்மை (சைனோகுளுகோசைட்) குறைவாகவும் இருக்கும்.

உருவாக்கிய முறை ' நைஜீரியா நாட்டில் உருவாக்கப்பட்ட இந்த தேர்வு (மரவள்ளி) கொலம்பியா நாட்டிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டது. இது ஆப்பிரிக்கா மரவள்ளி தேமல் நோய்க்கு எதிர்ப்புத்திறன் கொண்டது. இதன் குறியீட்டு எண் டி.எம்.எஸ் , 30001.

வயது (நாட்கள்) ' 270 — 300

பருவம் ' ஜுன்-ஜுலை, அக்டோபர்-நவம்பர்

விளைச்சல்

| | |
|---|---|
| டன் , எக்டர் | 38 |
| கூடுதல் மகசூல் | |
| / விசாகம் | இணையான மகசூல் |

அதிகபட்ச மகசூல் ' 38 டன்,எக்

பயிரிட உகந்த மாவட்டங்கள் ' தர்மபுரி, ஈரோடு, நாமக்கல், சேலம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் வண்டல் கலந்த மணல் பாங்கான இடங்கள் மற்றும் கேரளாவிலும் பயிரிடலாம்.

## 7. புடலை வெள்ளை நெட்டை – பிஎல்ஆர் (எஸ்ஜி) 1

சிறப்பியல்புகள்

- இறவை விளைச்சலுக்கு ஏற்றது சமைத்து உண்பதற்கு ருசியும் மணமும் நிறைந்த காய்கள்
- குறைந்த நார்ச்சத்தும் மற்றும் அதிக சதைப்பற்றும் மிக்கது
- முதிரும் பருவத்தில் காய்கள் வளைந்தும் நெளிந்தும் மாறாது

| | |
|---|---|
| உருவாக்கிய முறை | நாட்டு இரகத்திலிருந்து தனி வழித் தேர்வு |
| வயது (நாட்கள்) | 135 |
| பருவம் | ஜூன் - செப்டம்பர், நவம்பர் - மார்ச் மற்றும் ஏப்ரல் - மே. |

விளைச்சல்

| | |
|---|---|
| டன் , எக்டர் | 35 – 40 |
| கூடுதல் மகசூல் | |
| கோ 1 | 30.5 |

| | |
|---|---|
| அதிகபட்ச மகசூல் | 46.5 டன்,எக் |
| பயிரிட உகந்த மாவட்டங்கள் | கடலூர், விழுப்புரம், வேலூர் , திருவண்ணாமலை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்கள் |



## 8. வீரிய ஒட்டு வெண்டை – கோபிஎச் 1

சிறப்பியல்புகள்

- செடிகள் 110-120 செ.மீ. உயரம் வரை வளரக் கூடியது
- அதிக மகசூல் தரவல்லது. காய்கள் நீளமாக, மிருதுவான தன்மையுடன் அடர்ந்த பச்சை நிறத்தில் இருக்கும்
- செடி ஒன்றில் 21-29 காய்கள் கிடைக்கும்
- மஞ்சள் நரம்பு தேமல் நோய்க்கு எதிர்ப்பு சக்தி கொண்டது
- இவ்வீரிய ஒட்டு இரகமானது பூச்சி மருந்து தெளிக்காமல் அதிக மகசூல் தரவல்லது
- மஞ்சள் நரம்பு தேமல் நோய்க்கு எதிர்ப்பு சக்தி கொண்டது

உருவாக்கிய முறை ' வியூ தேர்வு , பிஏ4 (டி)

வயது (நாட்கள்) ' 120

பருவம் ' பிப்ரவரி - மார்ச், மே-ஜுன், நவம்பர்-டிசம்பர்

விளைச்சல்

| | |
|---|---|
| டன் , எக்டர் | 22.1 |
| கூடுதல் மகசூல் | |
| அர்கா அனாமிகா | 47.3 |
| எம் 10 | 16.3 |

அதிகபட்ச மகசூல் ' 26.1 டன்,எக்

பயிரிட உகந்த மாவட்டங்கள் ' கோயம்புத்தூர், தர்மபுரி, மதுரை, ஈரோடு, நாமக்கல், புதுக்கோட்டை ராமநாதபுரம், திருவண்ணாமலை, சேலம், சிவகங்கை, திருச்சி, தஞ்சாவூர், விழுப்புரம், காஞ்சிபுரம் மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் இறவையில் சாகுபடி செய்ய உகந்தது. நல்ல வடிகால் வசதியுள்ள இருமண்பாட்டு நிலம் சாகுபடி செய்ய உகந்தது.



## 9. சப்போட்டா — பிகேஎம் (எஸ்ஏ) 5

**சிறப்பியல்புகள்**

- அதிக மகசூல் மற்றும் அதிக 'கரையும் சர்க்கரை சத்து'
- உலர் பழங்கள், 'மில்க் ஷேக் பவுடர்' (அடைம ளாயமந ஂடிறனநச) மற்றும் ஜாம் தயாரிப்புக்கு ஏற்றது.
- இலைகள் மெழுகு பூசியது போன்று, குறுகலாக சிறிய அளவில் மேல் நோக்கி வட்ட அடுக்குகளாக காணப்படும். இலைகளில் 'புரோலின்', நீர்ச்சத்து, இலை மேல் மெழுகு மற்றும் பச்சையம் நிறைந்து காணப்படும்.
- இந்த இரகம் வடிகால் வசதியற்ற, வறட்சியான களிமண் பூமிகளுக்கு ஏற்றது.
- பழங்கள் நீள முட்டை வடிவத்தில், இளம் பழுப்பு நிறத்தில், மிருதுவான தோல் கொண்டு காணப்படும். சந்தையில் காண்போர் கவனத்தை கவரும் வண்ணம் விளங்கும்.
- பழங்களின் சதைப் பகுதி திடமாகவும், வண்ணம் மாறாமல் காணப்படும். இதர இரகங்கள் நிறம் மாறி கருப்பாக மாறிவிடும்.
- இந்த இரகம் இலைப்புள்ளி நோய் மற்றும் இலை சுருட்டுப் புழு போன்றவற்றின் தாக்கத்தை தாங்கி வளரும்.

உருவாக்கிய முறை : இயற்கையான அயல் மகரந்தச்சேர்க்கை மூலம் விருதுநகர் என்ற உள்ளூர் இரகத்திலிருந்து தேர்வு செய்யப்பட்ட இரகம்

வயது (நாட்கள்) : நீண்டகாலப் பயிர்

பருவம் : ஜூன் முதல் அக்டோபர் வரை

விளைச்சல்

| | கரிசல் மண் |
|---|---|
| டன் , எக்டர் | 18.70 |
| கூடுதல் மகசூல் | |
| பிகேஎம் 1 | 19.06 |
| பிகேஎம் 4 | 17.97 |

அதிகபட்ச மகசூல் : 18.88 டன் , எக்டர்

பயிரிட உகந்த மாவட்டங்கள் : தென் மாவட்டங்களில் காணப்படும் வடிகால் வசதியற்ற வறட்சியான பூமிகளுக்கு ஏற்றது.



## 10. பலா – பிஎல்ஆர் (ஜெ) 2

சிறப்பியல்புகள்

- சிறந்த தரம் மற்றும் பெரிய அளவிலான பழங்கள்
- விரும்பி உண்ணத்தக்க, சுவையான சுளைகள்
- சிறந்த குணநலன்களுடன், நீடித்த இருப்புத் தன்மையும் கொண்டு விளங்குவதால் விவசாயிகளுக்கு அதிக வருமானம் கிடைக்கிறது.
- முக்கிய பூச்சி மற்றும் நோய் போன்றவற்றின் தாக்குதல் குறைவு

உருவாக்கிய முறை : பத்திரக்கோட்டை என்னும் உள்ளூர் இரகத்திலிருந்து விதையில்லா இனப்பெருக்க முறையில் தேர்வு செய்யப்பட்டது.

வயது (நாட்கள்) : நீண்டகாலப் பயிர்

பருவம் : ஜுன் முதல் டிசம்பர் வரை

விளைச்சல்

| | எண்ணிக்கை | கிலோ |
|---|---|---|
| பழங்கள்,மரம்,வருடம் | 95-110 | 1600-1950 |
| கூடுதல் மகசூல் | | |
| பிஎல்ஆர் 1 | 29.0 | 114 |

அதிகபட்ச மகசூல் : 1950 கிலோ,மரம்,வருடம்

பயிரிட உகந்த மாவட்டங்கள் : சமவெளிப் பகுதிகளுக்கேற்ற இரகம் ஆழமான, வடிகால் வசதி நிறைந்த வண்டல் மண்

